பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
● பட அல்பங்கள்,
● படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு;
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3·50

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழல்பட பிரதி ஒன்று 3R/PC- 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் (7 Days)
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

சுடர் 5: பிரமோதூத ஸூ ஆடி ௴ 16 புதன்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 09 (01 - 08 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 151

### யாழ்.நகரில் திங்கள் இரவு பொம்மர்கள் அனர்த்தம்

# ஆயர் இல்லமும், ஆசனக்கோயிலும் விமானக் குண்டு வீச்சினால் சேதம்!

## யாழ். ஆயர் தெய்வாதீனமாகத் தப்பினார்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 1

யாழ். நகரில் நேற்று முன்தினம் இரவு ஏழு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சு அனர்த்தத்தின் போது, யாழ். ஆயர் இல்லமும், யாழ். புனித மரியாள் பேராலயமும் (ஆசனக் கோவிலும்), பேராலய பங்குக் குருமனையும் பெரும் சேதமடைந்தன.

குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்ற சமயம் ஆயர் இல்லத்தில் தங்கியிருந்த யாழ். ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை தெய்வாதீனமாக காயம் ஏதுமின்றித் தப்பினார்.

கடந்த திங்கள் இரவு 6 30 மணியளவில் யாழ் கோட்டைக்குள் ஹெலிக் கொப்டர் ஒன்றை தரையிறக்க முயற்சி எடுக்கப்பட்டது என்பதும்–

அதற்காக ஏழுவிமானங்கள் யாழ். கோட்டையைச் சூழவுள்ள பகுதிகள் மீது அடுத்தடுத்து குண்டுகளைப் பொழிந்து தள்ளின என்பதும்தெரிந்தவையே.

இக்குண்டுகளில் ஒன்று பேராலயத்துக்கும் ஆயர் இல்லத்துக்கும் இடையில் விழுந்து வெடித்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

குண்டு வெடிப்பினால் ஆலயத்தின் கதவுகள் கழன்று வீழ்ந்தன; கூரைச் சீற்றுக்கள் நொருங்கின; கோபுரத்தில் உள்ள கண்ணாடிகள் நொருங்கிச் சிதறின; ஜன்னலில் இருந்த இரும்பு பிரேம் கம்பிகள் முறுகிய நிலையில் வீழ்ந்தன.

அருகில் இருந்த ஆயர் இல்லத்திலும் கண்ணாடிகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு வெடித்துத் தீப்பந்தாக எரிந்து பேராலயத்தை புகைமண்டலம் மூடியது

### நேரில் கண்ட பங்குத் தந்தை தகவல்

யாழ்ப்பாணம், ஆக 1

''பேராலயப் பங்கு குருமனையின் வாசலில் நின்றேன். நான்நின்ற இடத்தில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் குண்டு விழுந்து வெடித்தது. அதை அடுத்து தீப் பந்து போல நெருப்புப் பற்றியது; பேராலாத்தைப் புகைமண்டலம் மூடியது''

- இவ்வாறு யாழ்-பேராலய பங்குத்தந்தை வண.எஸ் எச். ஜெபநேசன் அடிகளார் கண் கலங்கியவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்ததிங்கட்கிழமை இரவு பேராலயத்துக்குச் சமீபமாக இடம் பெற்ற பொம்மர் குண்டு வீச்சுச் சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பிய அவர் அங்கு நடந்த சம்பவம் பற்றி விவரிக்கையில் மேலும் கூறியதாவது:-

பொம்மர் குண்டு வீச்சு நடக்கும் போது வழமையாக பேராலயத்துக்குச் சமீபமாக வீடுகளில் இருக்கும் பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோர் பாதுகாப்புக்காக பங்கு குருமனையில் தஞ்சமடைந்திருப்பார்கள்.

அதே போன்று அன்றும் நூற்றுக்கணக்கானவர்கள் தஞ்சம் அடைந்திருந்தனர். தேவாலயம் பாதுகாப்பான இடம் என நம்பி மக்கள் இங்கு வந்திருந்தனர்.

நான் குருமனையின் வாசலில் நின்றேன். நான் நின்ற இடத்தில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் ஆலயத்துக்கு முன்பாக குண்டு ஒன்று விழுந்து வெடித்து தீப்பற்றி எரிந்தது; அப்பகுதி புகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் பிரதிநிதிக்கு அறிவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ். பேராலயம் சேதமாக்கப்பட்ட விடயம் குறித்து கொழும்பில் உள்ள பாப்பரசரின் பிரதிநிதிக்கு அறிவிக்கப்பட இருக்கிறது.

யாழ் பேராலயம், ஆயர் இல்லம் ஆகியன சேதமடைந்தது குறித்து பாப்பரசரின் பிரதிநிதிக்கு தெரியப்படுத்தி, அவர் மூலம் சர்வதேச சமூகத்துக்கும் அறிவிக்கப்பட இருப்பதாக யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சேதமடைந்த பேராலயத்தை நேற்றுக்காலை பார்வையிட்டார். (ஓ-3)

## உணவுப் பொருள் ஏற்றிவர சென்ற முஸ்லிம்கள் கொலை

### விடுதலைப் புலிகள் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 1

உணவுப் பொருள்களை ஏற்றி வர லொறியில் சென்ற நான்கு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதாகவிடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில் உள்ள அகதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு லொறி ஒன்றில் செத்தல் மிளகாயை ஏற்றிக்கொண்டு இவர்கள் சென்றதாகவும்–

மதவாச்சிக்கு அப்பால் யக்காவ முகாமிலிருந்த இராணுவத்தினர் இவர்களைத் தடுத்து நிறுத்தி ஊர்காவல் படையினரிடம் ஒப்படைத்தனர் என்றும்–

அவர்கள் லொறியில்சென்ற நான்கு முஸ்லிம்களையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ★ தமிழகத்தில்

## ஈழ அகதிகள் எண்ணிக்கை 50 ஆயிரமாக உயர்ந்தது!

சென்னை, ஆகஸ்ட் 1

நேற்று மட்டும் ஆயிரத்து 350 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களையும் சேர்த்து, வடக்கு - கிழக்கு யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தமிழகம் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

தமிழகத்துக்கு இலங்கைத் தமிழ் அகதிகள் முன்னெப்பொழுதையும் விட இம்முறைதான் பெருமளவில் சென்றிருப்பதாக மாநில அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## மத்திய அரசு அவதானிக்கிறது

புதுடில்லி, ஆக. 1

இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் தமிழகம் வருவது குறித்து மத்திய அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இப்படி மத்திய உள்துறை அமைச்சர் முப்தி செய்யத் முகம்மது நேற்று புதுடில்லியில் தெரிவித்தார். [அ-உ]

## முதல்வர் கருணாநிதியின் புதுடில்லி விஜயம் ரத்து!

சென்னை, ஆக. 1

நேற்று புதுடில்லிக்குச் செல்லவிருந்த தமது பயணத்தைத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி ரத்துச்செய்துவிட்டார்.

புதுடில்லியில் நிலவும் அரசியல் நெருக்கடி காரணமாக தனது விஜயத்தை ரத்துச் செய்வதாக திரு. கருணாநிதி செய்தியாளரிடம் சொன்னார்;

தமது இந்த விஜயத்தின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் தாக்குதல்; படையினர் ஐவர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 1

முருங்கனிலிருந்து 10 ஆம் கட்டை நோக்கி முன்னேற முற்பட்ட அரச படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஐந்து படையினர் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

இந்த மோதலில் உதயகுமார் என்ற போராளி வீர

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப ஹெலியும் இட்ட வந்து தான் எமனாக மாற வேணும் எண்டது இல்லை... தூரத்திலை இருந்தே அந்த வேலையைச் செய்யும் எண்டு சொல்லுங்கோ.........!

## பெண் புலி வீரமரணம்

பலாலி இராணுவ முகாமிலிருந்துநேற்று நடத்தப்பட்ட ஷெல்தாக்குதலில் பெண்புலி சிவமதி [ மனோகரநாதன் பவானி கின்னியா] வீரமரணம்அடைந்ததாகஅறிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் அவருக்கு வீரவணக்கம் செலுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளனர். [அ]

## பொதுமக்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 1

நேற்று செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்த பொதுமக்களைத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

அந்தோனிப்பிள்ளை என்பவரிடம் இருந்து பணம், நகை ஆகியன கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## வீதிகளில் சீனி விற்பனை!

திருநெல்வேலி, ஆக. 1

குடாநாட்டில் மீண்டும் சீனி ஓரளவு விற்பனைக்கு வந்துள்ளது.

கொக்குவில், கோண்டாவில், சுன்னாகம் பகுதிகளில் வீதியோரங்களில் சீனி விற்பனை நடைபெறுகிறது. ஒரு சில கடைகளிலும் கூட விற்பனை செய்யப்படுகிறது.

கிலோ 50 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனையாகும் சீனியின் விலையில் இன்னும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-143]

### சுபநேரம்

1 - 8 - 90

சுபநேரம்:
04-33— 06-03

இராகுகாலம்
12-03 — 01-33

## விமானம் வீசிய குண்டுகள் கோட்டைக்குள் வீழ்ந்தன?

சென்னை, ஆகஸ்ட் 1

ஸ்ரீ லங்கா விமானப்படையினர் திங்கள் இரவு யாழ் கோட்டை முகாமைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி நடத்திய குண்டு வீச்சின் போது அந்தக் குண்டுகளில் சில இலக்குத் தவறி யாழ் கோட்டைக்குள் விழுந்தன.

ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்றிரவு இத்தகவலைவெளியிட்டது.

போராளிகளின் இலக்குகள் மீது விமானப்படை வீசிய குண்டுகள் இலக்குத் தவறி பொலீஸாரைத் தாக்கின என்றும் —

அதனால் இரு பொலீஸார் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்) (உ-எ)

## சீருடையினரின் சூட்டுக்கு 13 தமிழர்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஆக 1

திருகோணமலை மாவட்டத்தில் 13 தமிழர்கள் இராணுவச் சீருடை அணிந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கோவிலடி என்னுமிடத்தில் அண்மையில் 14 ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குஇலக்காகிஉயிரிழந்ததற்கு இது பழிவாங்கலாக இருக்கலாம்என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-எ)

## கைதான முஸ்லிம்கள் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 1

மட்டக்களப்பு, கல்லூர் என்ற இடத்தில் இராணுவத்தினர் முஸ்லிம்கள் சிலரை கைது செய்து, அவர்களை சித்திரவதைக்குள்ளாக்கினர் என்றும், கொலை செய்தனர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அது சம்பந்தமாக வெளியிடப்பட்ட தகவல்கள் வருமாறு:-

★ ஏ. நாகூர் மீரான் [வயது 40] -சின்னச்சிப்பங்குளம்- இவர் கொலை செய்யப்பட்டார்.

★ நாகூர் சலாவுதீன் [வயது 20] -சின்னச்சிப்பங்குளம்- இவரிடம் பணம் கொள்ளையிடப்பட்டது.

★ எம். நாகூர் கலிம் [வயது 42] -கல்லூர்- இவருக்கு வெட்டுக் காயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது;

★ என். சுல்டான் [வயது 35] -கல்லூர்- இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

★ ஏ. புஸ்டான் [வயது 35] -ஆனைவிழுந்தான்- இவர் அடிகாயங்களுடன் முகாமிலிருந்து தப்பி வந்துவிட்டார்.

★ எம். மன்சூர் [வயது 24] -கல்லூர்- சித்திரவதைக்குட்படுத்தப்பட்டபின் இவர் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-9)

## கல்வியங்காடு பகுதியில் நேற்று ஹெலி தாக்கி ஒருவர் மரணம்

### வேட்டுக்கள் தூரம் பாய்ந்து மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 1

நேற்றுக் காலை 8-15 மணியளவில் பலாலிப் பக்கமாக இருந்து திடீரென வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று கல்வியங்காடு பகுதிக்கு மேலாகப் பறந்தபடி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்; மூவர் காயமடைந்தனர்.

கல்வியங்காடு, இராசபாதையைச் சேர்ந்த வடிவேலு சதாசிவம் (வயது 27) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இறந்தவர் கச்சான் வியாபாரி என்றும் —

அவர் தமது வீட்டின் முற்றத்தில் நின்றபோதுதோளின் ஊடாக வேட்டுப் பாய்ந்து உயிரிழப்பு ஏற்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கல்வியங்காடு பகுதிக்கு மேலாக சுற்றியபடி தீர்க்கப்பட்ட வேட்டுக்கள் — வெகு தூரம் பாய்ந்து வந்து— முத்திரைச் சந்திப் பகுதியில் நின்றவர்களையும் காயப்படுத்தியது.

இதில் முத்திரைச் சந்திப் பகுதியைச்சேர்ந்த கே. பாலசிங்கம் என்ற குடும்பஸ்தர்

(4 ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### கோழித்தீன்

உங்களுக்குத் தேவையான தரமான கோழித்தீன் வகைகள் தயாரித்துக்கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/,1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [13962]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவண' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [13961]


# கைவிடப்பட்ட பட்டி மாடுகளால்

# கிளிநொச்சியில் பயிர்கள் அழிவு

கிளிநொச்சி, ஆக. 1

பட்டி மாடுகளைப் பராமரிப்பதற்காக கொண்டு சென்றோர் அவற்றை கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளதால் கிளிநொச்சிப் பகுதியில் விவசாயப் பயிர்கள் அழிகின்றன.

இரணைமடுத்திட்ட உப குழுத் தலைவர் திரு.மு. கந்தசாமி இதனைத் தெரிவித்தார்.

கொடிகாமம், கச்சாய், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களில் இருந்து பராமரிப்புக்காக கொண்டுவரப்பட்டுள்ள பட்டி மாடுகளாலேயே இந்த அழிவு ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல், பொம்மர் தாக்குதல்களாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் இந்தப் பட்டி மாடுகளைக் கொண்டு வந்தோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கைவிடப்பட்ட இந்தப் பட்டி மாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊரியான், முரசுமோட்டை, மூன்றாம் வாய்க்கால் பகுதிகளில் பயிர் நிலங்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்திவருகின்றன.

பட்டிமாடுகளைக் கொண்டு வந்தோர் திரும்பி வந்து அவற்றை பொறுப்பேற்குமாறு திரு. கந்தசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## முதலுதவி நிலையங்கள்

போராட்ட காலத்துக்கு ஏற்ற முறையில் தற்காப்பு முதலுதவி பெற்றுக்கொள்ளும் வகையில், தமிழீழ விடுதலைப்புலிகள் ஆங்காங்கே முதலுதவி நிலையங்களை அமைத்து வருகின்றனர்.

தெல்லிப்பழை, கட்டுவன், கீரிமலை, மல்லாகம், சுன்னாகம், இணுவில், மானிப்பாய் சங்கானை ஆகிய பகுதிகளில் இவ்வாறான முதலுதவி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலுதவி பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்கள் இந்த நிலையங்களில் கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ளனர். இங்கு கடமையாற்றுவதற்கு போதிய ஆட்கள் இல்லாததால் உடனடியாக இவற்றில் சேர்ந்து கடமையாற்றுமாறு பயிற்சி பெற்றவர்களுக்கு விடுதலைபுலிகள்சார்பாகவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்-யுவதிகள் மண் மீட்க ஓரணியில் திரள வேண்டும்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 1

மண்மீட்புக்காக மடிந்து போன வீரப்போராளிகளின் அடிச்சுவட்டை பின்பற்றி எமது தலைவர் வழி முன்நின்று எமது மண்ணை மீட்டெடுக்க இளைஞர்களும் யுவதிகளும் ஓரணியில் திரள வேண்டும்.

சண்டிலிப்பாய் திறந்த வெளி அரங்கில் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின் ஆகியோரின் தியாகத்தை நினைவு கூர்ந்தும் 83ஆம் ஆண்டு வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்தும் நடத்தப்பட்ட வீர அஞ்சலிக்கூட்டத்தில் சண்டிலிப்பாய் சிற்றூரவைத் தலைவர் திரு. நா. அழகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

வலி. தென். மேற்கு வட்ட அவை தலைவர் திரு. சவிரிப்பிள்ளை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. குணம் மானிப்பாய் அரசியல் பொறுப்பாளர் திரு. அங்கள், மாசியப்பிட்டி சிற்றூரவைத் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார். (இ-5)

# தமிழரைக் கொன்று புலிகளை வெல்ல விரும்பவில்லையாம்

கொழும்பு, ஆக 1

வடக்கு- கிழக்கில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குத் தான் விரும்பவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்.

தெரணியகலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசுப்படைகளை தாக்கும் போது அப்பாவிக் குடிமக்களை மனிதக் கேடயங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துவது வருந்தத்தக்கது என்றும் அவர் கூறினார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவை மீண்டும் இழுக்கும் நோக்கத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து அகதிகளை தமிழ்நாடு செல்கு விடுதலைப் புலிகள் நெருக்குதல் செய்கிறார்கள் என்றும் ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

விடுதலைதப்புலிகளுடனான சண்டை முடிந்த பின்னர் வடக்கு - கிழக்கு மக்களுக்கு கூடுதலான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஒ-எ)

## தலைமன்னார் அகதிமுகாம் இலங்கை அரசு சிரத்தை:

கொழும்பு, ஆக 01

தலை மன்னாரில் பெரிய அகதிமுகாம் ஒன்றை அமைக்கும் விஷயம் குறித்து அரசு சிரத்தை காட்டி வருகிறது. ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் இத்தகவலை வெளியிட்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. அகதிகள் தூதராலயம் ஆகியவற்றுடன் இது தொடர்பாக அரசு தொடர்பு கொண்டிருப்பதாகவும் திரு. பிராட்மன் வீரக்கூன் தெரிவித்தார். (இ-எ)

# லெப்டினன்ட் ஜெனரலின் மகன் ஒரு லெப்டினன்ட்!

கொழும்பு, ஆக. 1

வவுனியா இராணுவ முகாமில் பிரசன்னா வனசிங்கா என்ற லெப்டினன்ட் பணி புரிந்து வருகிறார்.

அவர் வேறு யாரும்அல்லர். இலங்கை இராணுவத்தின் தற்[illegible] தளபதியான லெப்டினன்ட்ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் மகனே அவர்.

தந்தையான லெப்டினன்ட் ஜெனரல் கடந்த வாரம் வவுனியா இராணுவ முகாமிற்கு விஜயம் செய்தபோது லெப்டினன்ட் மகனையும் சந்தித்து உரையாடினார். (இ-எ)

## அனைத்துக் கட்சிக் குழுவில்

# இ.தொ.கா. பங்குபற்றாததற்கு இந்திய தூதரகமே காரணம்!

## சிறிமாவோ வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஆக. 1

அண்மையில் புதுடில்லி சென்று திரும்பிய அனைத்துக் கட்சிக் குழுவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஐக்கிய சோஷலிச முன்னணியும் இடம்பெறாமைக்கு யார் காரணம்?

இதனை எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

"அனைத்துக் கட்சிக்குழு புதுடில்லி செல்லாமல் இருப்பதற்கான முட்டுக்கட்டைகளை கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் போட்டு வந்ததாக நான் அறிகிறேன்.

இ.தொ.கா.வும் ஐ.சோ.மு.வும், அக்குழுவில் இடம் பெறாமல் இருக்க இந்தியத் தூதரகம் தனது செல்வாக்கை பயன்படுத்தியது.

அதனால் தான் அந்த இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் அக்குழுவில் இடம் பெறவில்லை.

— இப்படி திருமதி பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (உ-எ)

## வங்கி மூலம் கடனுதவி

கொழும்பு, ஆக. 1

வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வங்கி மூலம் கடன் வழங்கும் திட்டம் ஒன்றை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு செயற்படுத்த இருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## 2 லட்சம் விவசாயிகள் காப்புறுதி

கொழும்பு, ஆக. 01

1991 ஆம் ஆண்டு இறுதிக்குள் இரண்டு லட்சம் விவசாயிகள் காப்புறுதி செய்யப்படுவர் என்று விவசாய அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்தார். [இ - எ]

அமைச்சு தயாரித்துள்ள இந்த ஒன்றிணைந்தவேலைத் திட்டம் ஆகஸ்ட் மாத மத்தியில் இருந்து அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# கைதான பல்கலை மாணவர் ஓரிரு நாட்களில் விடுதலையாவர்

யாழ்ப்பாணம், ஆக. 1

தம்புள்ளையில் கைது செய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏழு மாணவர்கள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும், ஓரிரு நாட்களில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசையா யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டிடம் திங்கள் மாலை தகவல் வெளியிட்டார்.

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு செல்லும் போது தம்புள்ளையில் வைத்து பிரஸ்தாப மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஒ-3-5)

# புலிகள் விதைத்ததை படையினர் அறுவடை செய்கிறார்களாம்

கொழும்பு, ஆக. 1

பொத்துவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்ட நெற்செய்கையை விசேட அதிரடிப் பொலீஸ் படையினர் அறுவடைசெய்து வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்குச் சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொத்துவில் பகுதியில் விடுதலைப் புலிகள் நெற்செய்கை மேற்கொண்டிருந்தனர் என்றும் இப்போது விளைந்த நெற்பயிர்களை விசேட அதிரடிப் பொலீஸ் படையினர் அறுவடை செய்து வருகின்றனர் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-எ]


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## சகுந்தலாதேவி மயில்வாகனம்

தோற்றம்:- 05-09-1950

மறைவு: - 02-07-1990

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

நின் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [13967]


# வவுனியா செயலகம் இயங்கத் தொடங்கியது

## இணைப்பதிகாரியே அரச அதிபர்

கொழும்பு, ஆக.1

வவுனியா செயலகம் இயங்கத் தொடங்கி உள்ளது. பிரஸ்தாப மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கேணல் ரத்னாயக்கா நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே செயலகம் இயங்குகிறது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அனைவரும் அங்கு பணிபுரிகின்றனர். ஒரு சில தமிழ் அதிகாரிகளும் கடமைக்குச் சென்றுள்ளனர்.

வவுனியா இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த கேணல் ரத்னாயக்கா முதலில் மேலதிக அரசாங்க அதிபராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இம்மாதம் 25 ஆம் திகதி அவர் இணைப்பதிகாரி - அரசாங்க அதிபராகப் பதவி ஏற்றார். கேணல் ரத்னாயக்கா தாம் அரசாங்க அதிபராகப் பதவி ஏற்றதும் செயலகத்தில் தமிழர்கள் வகித்த பல உயர் பதவிகளுக்குச் சிங்கள அதிகாரிகளை நியமித்துள்ளார்.

இந்த வகையில் தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபராக திரு. யு.பி. பியசேனா, பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக திரு. அபயரத்தினா ஆகியோர் [நி]யமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா அரசாங்க அதிபராக இருந்த திரு. செ.பத்மநாதன், கூட்டுப்படை தலைமையகத்தில்இருந்து கிடைத்த உத்தரவை அடுத்து கடந்த 25 ஆம் திகதி தமது பொறுப்புக்களை கேணல் ரத்னாயக்காவிடம் ஒப்படைத்தார்.

எழுபது வயதான கேணல் ரத்னாயக்காஇராணுவசேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், சிமெந்து கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர். அதன் பிறகு வெலிஓயா குடியேற்றத் திட்டத்தின் திட்டமிடல் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். தமிழில் சரளமாகப் பேசக்கூடிய இவர் வவுனியா படை அலுவலகத்தில் ஒன்பது வருடங்கள் சிவில் நிர்வாக அதிகாரியாகக் கடமை புரிந்தவர். (அ 3)

## பிரார்த்தனை

குருநகர், ஆக 1

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் தினமும் ஒரு மணி நேரம் நாட்டில் அமைதி ஏற்பட வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. [இ-51]

# தேவாலயத்துக்குள் தஞ்சமடைந்த அகதிகளில் 600 பேர் கொலை!

## லைபீரியாவில் பயங்கரம்

மொன்றோவியா, ஆக. 1

லைபீரிய தலைநகர் மொன்றோவியாவில் உள்ள தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் மீது அரச படைகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

30 படைவீரர்கள் தேவாலயத்தினுள் புகுந்து சரமாரியாக, அங்கு நித்திரையில் இருந்த அகதிகள் மீது சுட்டனராம். உயிர் தப்பிய அகதிகள் சிலர் இதனைத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர்.

சம்பவம் இடம்பெற்ற சமயம் 3 ஆயிரம் அகதிகள் வரை அத்தேவாலயத்தில் தங்கியிருந்தனர்.

இந்த அகதி முகாம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பில் இருக்கிறது.

இந்தப்படுகொலையை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கண்டித்திருக்கிறது.

ஜனாதிபதி சாமுவேல் டோவின் அரசுப் படைகளுக்கும் சார்ள்ஸ் டெய்லர் தலைமையிலான விடுதலைப்படைகளுக்கும் இடையேயான சிவில் யுத்தத்தில் இருந்து தப்புவதற்காக இந்த அகதிகள் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

கிளர்ச்சிப்படையினரே அரசுப்படையினரின் சீருடையில் சென்று இந்தப்படுகொலையை நடத்தியிருக்க வேண்டும் என்று ஜனாதிபதி டோ கூறியிருக்கிறார். (இ-எ)

## வெளியேற்றப்பட்ட எம். எல். ஏக்கள்

# தனிக்குழுவாக இயங்குவர்?

சென்னை, ஆக. 1

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட எம். எல். ஏக்களான திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு கே.கே. எஸ். எஸ். இராமச்சந்திரன், திரு. உக்கம்சந்த் ஆகியோரை தனிக்குழுவாக சட்டசபையில் இயங்க அனுமதிப்பதா? என்பது பற்றி சபாநாயகர் விரைவில் முடிவு செய்ய இருக்கிறார்.

இத்தகவலை சபாநாயகர் திரு. தமிழ்க் குடிமகனே செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தனிக்குழுவாக இயங்க அனுமதிக்குமாறு இந்த மூன்று எம். எல். ஏக்களும் கடிதம் மூலம் சபாநாயகரைக் கேட்டுள்ளனர். [இ-எ]

# இந்தியா மனிதாபிமான உதவிகளை வழங்கும்; இராணுவ ரீதியில் தலையிடாது

## குஜ்ரால் மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி, ஆக. 1

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாண யுத்தத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இயன்ற அனைத்து உதவிகளையும் இந்தியா செய்யும். ஆனால் இந்திய இராணுவம் இதில் தலையிடாது.

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் கடந்த திங்கட்கிழமை நடந்த வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்றுவரும் சண்டை காரணமாக இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக அகதி [illegible] அமைக்கவேண்டும் [illegible] தியாவின் கோரிக்கையை சர்வதேச அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளும் என்று தாம் நம்புவதாக திரு. குஜ்ரால் தெரிவித்தார்.

இந்த வகையில் இலங்கை அரசுடனும் சர்வதேச அமைப்புக்களுடனும் இந்தியா தொடர்பு கொண்டிருப்பதாகவும் திரு. குஜ்ரால் தெரிவித்தார்.

பாதுகாப்பான இடங்களைத் [illegible] அமைப்பதற்கு இந்தியா ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் அவர்குறிப்பிட்டார்.

பொதுவாக சண்டையில் நேரடியாகப் பாதிக்கப்படும் பகுதிகளில் அகதிமுகாம்களை அமைக்க சர்வதேச அமைப்புகள் கூட இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் என்றும் திரு. குஜ்ரால் தெரிவித்தார்.

1987 இல் உருவான ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையை தேசிய முன்னணி அரசு ஆதரிப்பதாகவும் இலங்கையில் பிரிவினை நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை என்றும் திரு. குஜ்ரால் விளக்கப்படுத்தினார். (இ-எ)


# இதய அஞ்சலி



## இளையதம்பி ஈஸ்வரபாதம்

வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து
தெய்வத்தின் பதம் நாடிய ஈசா
கைவைத்து எம்மை கதறியழ விட்டேகி
கடுதியிலே போனதென்ன ஐயா!

கடமையில் வெகு கண்ணியமாய்
நேர்மையின் உறைவிடமாய்
நீதி ஒன்றுக்கே அடிபணிந்து
நெறி கோணாது பணிபுரிந்தாய்
உருவத்தில் சிறியவனே யானாலும்
உள்ளத்திலே மிகப் பெரியவனாய்
முகமலர்ந்து சிரிப்பு உதிர்த்து
புத்திமதி சொல்லும் செல்வா
நித்திலத்தில் நாம் உள்ளவரை
உன்தன் புன்முறுவல் முகம்மறவோம்
எங்கள் நெஞ்சத்தி லிருந்து
உகுத்தோம் இதய அஞ்சலியே!

ஷப்றா நிதி நிறுவன ஊழியர்கள்
உதயன் வெளியீட்டக ஊழியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இவர்கள் தமிழர்களா?

திருகோணமலையில் இருந்து அகதிகளாக வந்த தமிழர்களில் இரண்டாயிரத்து அறுநூறு பேர் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் மரநிழலில் வாழ்கிறார்கள் என்று தகவல் வெளியாகி இருக்கிறது!

அவர்கள் தம்மிடம் உள்ளதைச் சமைத்துச் சாப்பிட ஓர் இடம் கேட்டாலும் சிலர் இடம் கொடுக்கிறார்கள் இல்லை அதனால் அகதிகளில் பலரும் மரங்களின் கீழ் சமைத்தும், உறங்கியும் காலத்தைக் கழிப்பதாக உதயனின் தென்மராட்சிப் பகுதிச் செய்தியாளர்கள் உட்தகவல் தருகிறார்கள்.

தமிழர்கள் விருந்தினர்களை உபசரிப்பதில் முன்னிற்பவர்கள். இருப்பதைப் பகுத்து உண்ணும் பண்பு உடையவர்கள். அடுத்தவன் பசித்திருக்க உண்ணாதவன். வந்தாரை வாழ வைப்பவன் தமிழன். —இவ்வாறெல்லாம் இலக்கியங்களும், வரலாறுகளும் கூறுபவை பண்டைத் தமிழருக்குத்தான் பொருந்தும்.

இன்றைய தமிழனுக்கு அல்ல; அதுவும் ஈழத் தமிழனுக்கு அல்ல; அதிலும் யாழ்ப்பாணத் தமிழனுக்கு அல்ல என்று இனிப் புது இலக்கியம் படைக்கவேண்டும்.

அரசாங்கப் படைகள் நடத்தும் தாக்குதல்களில் எந்தத் தமிழன் எப்போது அகதியாவானோ என்ற நிலை எந்த நேரத்திலும் ஒவ்வொரு தமிழனும் அகதியாகக்கூடிய ஆபத்தான நிலை; அவலநிலை.

தானும் ஓர் அகதியாகும் ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்தும் உதவி தேடி வரும் ஓர் அகதிக்கு உதவி செய்ய நினைக்காதவர்கள் மனிதர்களா? ஒரு சகோதரத் தமிழனுக்கு இரண்டொரு நாளாவது தங்க வசதி கொடுத்து ஆறுதல் செய்யாதவன் ஒரு தமிழனா?

ஆயுதப்படையிடம் சிக்கினால், தாக்குதல் நடக்கும் இடத்தில் இருந்தால் தமது உயிர் பறிபோய்விடுமே என்று அஞ்சி, அல்லற்பட்டு, அவதிப்பட்டு, அந்தரித்து ஆதரிக்க ஒரு சகோதரத் தமிழன் இருக்கிறான் என்று நம்பிக்கையுடன் நூற்றுக்கணக்கான மைல் நடந்தும் ஓடியும், தவழ்ந்தும் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள் திருகோணமலைச் சகோதரர்கள். அவர்களுக்கு ஆறுதல் கூறி இரண்டொரு நாளாவது ஆதரிக்காதவர்களும் மனிதர்களா? இவர்களிடமா மனித நேயம் உண்டு?

இதே தமிழர்கள் தங்களுக்கும் மற்ற நாடுகள் உதவ வேண்டும், மனித நேயத்துடன் ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க என்ன அருகதை உண்டு? தங்களை அகதிகளாகத் தஞ்சம் அளித்துக் காப்பாற்றுமாறு தமிழ்நாட்டுக்குப் போக இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

உயிருக்கு, உணவுக்கு அந்தரிக்கும் சொந்தச் சகோதரனை ஆதரிக்காதவனுக்கு உலகத்தில நீதியும், நியாயமும் எவ்வாறு கிடைக்கும்? அதனை எதிர்பார்க்க அவனுக்கு என்ன பாத்தியதை உண்டு? அவன் பரதேசியாகி பட்டொழிந்து போக வேண்டியதுதான்.

தமிழன் என்ற உணர்வு, மனிதன் என்ற நேசம் உள்ள எவரும் இப்படிச் செய்ய மாட்டார்கள் தனக்கு இல்லாவிடினும் ஆபத்தில் சிக்கியவனுக்கு உதவவேண்டும் என்ற உணர்வு உண்டாகும் வரை அது வளரும் வரை ஈழத் தமிழனுக்கு விமோசனமில்லை: அது நிச்சயம் இப்படியே பாவத்தின் வடிவங்களாய் கிடந்து உழல வேண்டியது தான்!

### அரச ஊழியருக்கு பங்கீட்டு அட்டை

யாழ்ப்பாணம், ஆக. 1

வெளி மாவட்டங்களில் இருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள அரச ஊழியர் குடும்பங்களுக்கு தற்காலிக பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட உள்ளன. [இ-3]

### இராணுவ அதிகாரி சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக. 1

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் பெயர் தர்மப்பிரிய சில்வா.

அவர் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து பொலீஸார் சிலருடன் வாக்குவாதப்பட்டார் என்றும் அதைத் தொடர்ந்தே பொலீஸார் ஒருவரினால் சுடப்பட்டார் என்றும் தெரிகிறது. (இ-எ)

# அகதிகள் மௌன ஊர்வலம் சென்று மகஜர் கையளிப்பர்

## ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தில்

கொழும்புத்துறை, ஆக. 1

இன மோதல்கள் ஏற்படாது தடுக்கவும், தமிழர்கள் அடிக்கடி அகதிகளாவதைத் தடுக்கவும் கோரி, தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் மகஜர் ஒன்றைக் கையளிக்க உள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் சேர்ந்து இன்று புதன்கிழமை மௌன ஊர்வலமாகச் சென்று பிரஸ்தாப மகஜரைக் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஐ. நா. உ. ஸ்தானிகராலயத்தில் கையளிக்கப்பட உள்ள மகஜரில் ஐந்து கோரிக்கைகள் உள்ளதாக அகதிகள் பாதுகாப்பு மன்றப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

★ இலங்கையில் காலத்துக்குக் காலம் நடக்கும் இன மோதல்கள், ஆயுதப்படையினரின் தாக்குதல்கள் என்பவற்றால் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு வருவதை உலகின் மனிதநேயமுள்ள மக்களின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

★ ஈழத்தில் அகதிகள் முகாம்கள்மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு அகதிகள் கொல்லப்படுவதைத் தடுக்க உலகநாடுகள் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்,

★ இனமோதல்கள் ஏற்படாத வகையில் நிரந்தரத் தீர்வுகள் உலகமக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

—இவை நாளைகையளிக்கப்பட இருக்கும்மகஜரில் அடங்கியிருக்கும் சில அம்சங்களாகும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-30)

## வவுனியா அரச ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிக்கார்

யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ள வவுனியா அரச ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவதில்லை எனத் தீர்மானித்து யாழ். அரச அதிபர் ஊடாக வவுனியா அரச அதிபருக்கும், பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

பாதுகாப்பின்மை, தங்குமிடவசதி போக்குவரத்து இன்மை, உணவுத்தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளை காரணங்காட்டி தாங்கள் வேலைக்குத்திரும்ப முடியாதுள்ளது என மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## அகதி முகாமிலிருந்த ஒன்பது தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், ஆக. 1

ஆலங்கேணி அகதி முகாமிலிருந்த ஒன்பது குடும்பஸ்தர்கள் கடந்த சனிக்கிழமை அன்று படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

முகமூடிகள் சகிதம் வந்த படையினர் இவர்களைக் கைது செய்து கொண்டு சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

சினித்தம்பி பாக்கியராஜா, சண்முகம் வடிவேல், இளையதம்பி, வன்னியசிங்கம், நடேசன் நாதன், குணம், நெல்லிநாதன், நாகராஜா நாதன், வெள்ளையன் அருணாசலம் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டது.

இதேவேளை —

அதே தினம் கந்தளாய் கோயில் கிராமத்தில் இருந்த ஒன்பது தமிழர்களையும் படையினர் கைது செய்து கந்தளாய் இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றதாகக் கூறப்பட்டது. (உ-9)

## படையினர் கூட்டிச் சென்ற இந்திய சிற்பாசிரியர் எங்கே?

கொழும்பு, ஆக. 1

மட்டக்களப்பு, ஏறாவூரில் இந்துக்கோயில் ஒன்றைப் புதுப்பித்துக் கொண்டிருந்த இந்திய பிரசைகளான நான்கு சிற்பாசிரியர்களைக் காணவில்லை என்று முறையிடப்பட்டு உள்ளது.

இலங்கை இராணுவத்தினர் அவர்களைக் கூட்டிச் சென்றதில் இருந்து அவர்கள் காணாமல் போய் விட்டனர் என்று கூறப்படுகிறது.

அவர்களில் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவர்கள் நால்வரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்பிகள் ஆவர்.

அவர்களைக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் —

இச் சம்பவம் குறித்து புலன் விசாரணை நடத்தும்படி பாதுகாப்பு அமைச்சு கோரப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் உள்ள இந்திய‌த் தூதரகம் அறிவித்திருக்கிறது. (இ-எ)

### சங்கக்கடையில் பொருள் திருட்டு

வட்டுக்கோட்டை, ஆக. 01

அராலியில் உள்ள சங்கானை ப. நோ. கூ. சங்கக் கிளை 25 இல் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளகள் திருடப்பட்டுள்ளன. (இ - 161)

### பெர்மிட் மூலம் சீனி, லக்ஸ்பிறே

வட்டுக்கோட்டை, ஆக. 1

சங்கானை ப. நோ. கூ. சங்கம் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பெர்மிட் மூலம் அரைகிலோ சீனியும், 1 லக்ஸ்பிறே பக்கெட்டும் வழங்கி வருகிறது கிளைகள் மூலம் வழங்கப்படும் இவ் வேலையை கிளைக்குழு உறுப்பினர்களும் சிற்றூர் அவை உறுப்பினர்களும் மேற்பார்வை செய்கின்றனர்.

குழந்தைகளுக்கான பெர்மிட்டும் கிளைக்குழுத் தலைவரினதும், சிற்றூர் அவைத் தலைவரினதும் சிபார்சின் பேரிலேயே வழங்கப்படுகின்றன. (இ-161

### திங்களன்று கோட்டைமீதான தாக்குதலில் இரு பொலீஸார் மரணம்

கொழும்பு, ஆக. 1

யாழ். கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் கடந்த திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர் என்றும்- மூன்று பொலீஸார் காயமடைந்தனர் என்றும் ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-எ]

## யாழ்.திரும்ப முடியாது இன்னும் நூற்றுக்கணக்கானோர் கொழும்பில்

மானிப்பாய், ஆக 1

இன்னும் நூற்றுக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு போதிய பாதுகாப்பு வசதிகள் இன்றி கொழும்பில் தங்கி உள்ளனர்.

கொழும்பில் உள்ள விடுதிகளிலும், இனத்தவர்களுடனும் தங்கியுள்ளவர்களைவிட பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் மட்டும் சுமார் ஐநூறு பேர் அகதிகளாகத் தங்கியுள்ளனர்

இவர்களுக்கு வேண்டிய உணவு மற்றும் வசதிகளை சர்வோதய இயக்கம் கவனித்து வருகின்றது. இந்த இரு அகதிமுகாமிலும் மன்னார் மாவட்டத்துக்கு செல்வதற்கென இருநூற்றுக்கு அதிகமானவர்கள் காத்திருக்கின்றார்கள்.

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு கூடுதலாக இவர்கள் அங்கு தங்கி இருந்தும் போக்குவரத்துக்கான பாதுகாப்பு ஒழுங்குகள் எதுவும் இவர்களுக்கு செய்து தரப்படவில்லை.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு செல்வோருக்கு வேண்டிய பாதுகாப்புக்களையும் வாகன வசதிகளையும் புனர்வாழ்வு அமைச்சு அவ்வப்போது செய்துவருகின்றது.

எனினும் அவசரம் காரணமாக சிலர் துணிவுடன் ரயில் மூலம் மதவாச்சி வரை பிரயாணம் செய்து, பின் வவுனியா வந்து அதிக பணச் செலவுடன் லொறிகள் மூலமாக யாழ்ப்பாணம் வருகின்றனர். [இ-90]

## நிவாரணம் எதுவும் இன்றி குருநகர் குடும்பங்கள்

குருநகர், ஆக. 01

பூநகரி - கல்முனை பந்தலடியில் தஞ்சமடைந்திருக்கும் 92, குருநகர் பகுதிக் குடும்பங்களுக்கும் இதுவரை நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

யாழ். அரச அதிபரால் பணிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களும் இன்னும்வழங்கப்படவில்லை (இ-51)

### மூன்று முறிப்பில் முஸ்லிம்களுக்கு முகாம்

கொழும்பு, ஆக. 01

வட பகுதியில் இருந்து வெளியேறும் முஸ்லிம் அகதிகளுக்கு வவுனியா, மூன்று முறிப்பில் உள்ள அரசினர் பாடசாலையில் தனி முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இத்தகவலை வவுனியா மாவட்ட சிவில் இணைப்பு அதிகாரி கேர்னல் ரத்னாயக்கா வெளியிட்டார். (இ-எ)

### லயன்ஸ் உதவி

சாவகச்சேரி, ஆக. 1

இப்பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்குத் தேவையான வைத்திய சேவையை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் வழங்கி வருகிறது

டாக்டர். எஸ். அருளானந்தம், டாக்டர். பே. பிலிப் ஆகியோர் இச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-31)

# ஆடியில் விதைக்க உகந்த பாசிப்பயறு பயிரிடுங்கள்

தற்போது உள்ள நெருக்கடி நிலையில் எமது பிரதேசத்தின்பருப்புத்தேவையை பூர்த்திசெய்ய பாசிப்பயறு ஒரு சிறந்த புரதப்பயிராகும். அது பணத்தையும் மீதப்படுத்தஉகந்தது. பருப்பு வகைகள்வளிமண்டல நைதரசனை பாதிப்பதால் மண்ணை திருத்தவும் உதவுகின்றன.

பாசிப்பயறில் பல இனங்கள் உண்டு. அவற்றில் 'ரைப் - 77' 70 நாள் பயிராகும். பச்சை நிறம் உடையது. ஏக்கருக்கு தேவையான விதை அளவு - 15 கிலோ.

### நெருக்கடிகால பயிர்ச் செய்கை

எம்ஜ-4, எம்ஜ - 5 ரைப்51' ஆகியன விவசாயப் பகுதியால் சிபார்சு செய்யப்பட்ட புதிய இனங்களாகும்.

எம்ஜ 4 65 முதல்-75 நாள் பயிராகும். பச்சை நிறமானது. நடுத்தரப் பருமன் உடையது. ஏக்கருக்குத் தேவையான விதை அளவு- 12-15 கிலோ.

'எம்ஜ - 5' 70 - 80 நாள் பயிராகும். பச்சை நிறமுடையது. பெரிய விதைகள் - ஏக்கருக்கு தேவையான விதை அளவு 12-15 கிலோ.

'ரைப் 51' 60-65 நாள் பயிராகும். ஏக்கருக்கு தேவையான விதை அளவு:- 10-12 கிலோ. பச்சை நிறமுடைய விதைகள். சிறியவை

''ரைப் 51'' சிறு போகத்திற்கு செய்யக்கூடிய சிறந்த பயிராகும். இப்பொழுது ஆடி மாதத்தில் இப்பயிரை பயிரிடலாம். 60 நாட்களில் அறுவடை செய்யலாம். 400கிலோ விளைவு தரக்கூடியது.

#### நிலத்தை பண்படுத்தல்

பருப்பு வகைகளின் பயிர்ச் செய்கைக்கு நன்கு நீர் வடிப்புள்ள மண்ணை தெரிவு செய்தல் வேண்டும் ஓரளவு நீர் வடிப்புள்ள மண் கொண்ட இருவாட்டி வயல்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டால் பொருத்தமான இடங்களில் வாய்க்கால்களை வெட்டி நீர் வடிய விடப்படவேண்டும்.

நிலம் உழப்பட வேண்டும் அல்லது மண் வெட்டியால் 15-20 ச.மீ ஆழத்திற்கு பண்படுத்தப்பட வேண்டும் பின்பு மண் தூர்வையாக்கப்படல் வேண்டும் நீர் வடிப்பு திருப்திகரமாக இல்லாது நீர்ப்பாசனம் செய்ய இயலுமானால் வரம்புகளும், வாய்க்கால்களும் அமைக்கப்படல் வேண்டும். இரண்டு வரம்புகளுக்கு இடையில் உள்ள தூரம் 60 ச. மீ ஆக இருப்பது அவசியம்.

#### நடுகை

(அ) சமதரையில்.

வரிசைகளுக்கிடையே உள்ள தூரம் 30 ச. மீ.

தாவரங்களுக்கிடையே உள்ள தூரம் 7.5 - 10ச. மீ. (ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒவ்வொரு தாவரம்)

(ஆ) வரம்பு, வாய்க்கால் முறையில் நடும்போது:-

மேடையின இரு பக்கங்களிலும் 30-ச.மீ விளிம்பு விட்டு ஒரு மேடையில் இரு வரிசைகளிலும் நடவும். தாவரங்களுக்கிடையேயுள்ள தூரம் 15-ச மீ ஆகும். ஒவ்வொரு நிலையத்திலும் ஒவ்வொரு தாவரம்.

கா. கந்தசாமி
(ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு அலுவலர்)

#### பசளைகள்

(அ) அடிக்கட்டுப் பசளையாக N. P. K 6. 25. 18 உரக் கலவையை நடுவதற்கு முன் ஏக்கருக்கு 100 கி.கி பிரயோகிக்கவும்.

(ஆ) மேற் கட்டுப் பசளையாக பூக்கும்போது ஏக்கருக்கு 12.5 கி.கி யூரியாவை பிரயோகிக்கவும்.

#### களைகட்டல்

2-4 வாரங்களில் கையால் களை கட்டல்வேண்டும். பயிர் முளைக்குமுன் பாவிக்கும் களை கொல்லியைப் பயன்படுத்தியும் களைகளைக் கட்டுப்படுத்தலாம். 2.85 லீற்றர் 'வசோ' வை 180 லீற்றர் நீரில் கலந்து ஏக்கர் ஒன்றிற்கு விசிறவும் [5 பைந்து 40 கலன் நீரில்] நட்டவுடன் ஈரமான நிலையிலுள்ள மண்ணின்மீது விசிறவும். மண்ணில் ஈரலிப்பு இல்லாவிட்டால் முதல் மழையின் பின் விசிறவும்.

#### நீர்ப்பாசனம்

சிறு போகத்தில் முதல் மூன்று வாரங்கள் வரை 4 நாட்களுக்கு ஒரு முறையும், 3ம் வாரத்தின் பின் அறுவடைக்கு 2 வாரங்களின் முன் வரையும், 7-9 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டும். எனினும் நீர்ப்பாசன ஒழுங்குகள் மழைவீழ்ச்சியையும், மண் நிலைமைகளையும் பொறுத்து மாறும்.

### கமமும் புலமும்

#### பூச்சி, நோய் கட்டுப்பாடுகள்

போஞ்சி ஈயும், கௌபீ தண்டுஈயும் இளப்பயிரை 2-3 இலைப்பருவத்தில் தாக்கும். அதனால் பயிர் வாடி இறக்கும். பின்வரும் பூச்சி நாசினிகளுள் ஒன்றைப் பாவித்து இதைக்கட்டுப்படுத்தவும். ஒரு வாரத்தின் பின் மீண்டும் விசிறவும்.

(அ) போமோதியோன்-25% செ. கு 560-840 மி லீ 125 -175லீ நீரில் ஏக்கரொன்றுக்கு.

(ஆ) மொனோ குரோட்டோ பொஸ் 60% செ. கு. 336 - 448 மி. லீ 100 லீற்றர் நீரில் ஏக்கரொன்றுக்கு.

#### இலையுண்ணும் புழுக்கள்

இவற்றின் தாக்கம் ஏற்பட்டால் மொனோகுரோட்டோ பொஸ் 60% செ. கு 140-199 மி லீ. 125 - 175 லீ. நீரில் ஏக்கரொன்றுக்கு.

#### காய் துளைப்பான்

இவற்றின் தாக்கம் பூக்கும் பருவத்தில் ஏற்படும். பூ அரும்புகள், பூக்கள், காய்கள் அனைத்தும் தாக்கப்படும். அவற்றைக் கட்டுப்படுத்த மொனோகுரோட்டோ பொஸ் 60% செ. கு. 560 - 860 மி. லீ., 125 - 175 லீ. நீரில் ஏக்கரொன்றுக்கு விசிறலாம்.

#### நோய்கள்

(அ) தூள் பூஞ்சண நோய்

இது ஒரு பூஞ்சண நோய். வெண் நிறத் தூள் போன்று பங்கசு இலைகளில் படிந்து காணப்படும். பின்பு இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

கட்டுப்பாடு:- கந்தகம் நீரில் நனையக்கூடிய தூள் 300 - 400 கிராம் 125 - 175லீ. நீரில் ஏக்கரொன்றுக்கு.

(ஆ) அடியழுகல்

இளம் தாவரத்தில் காறைப் பகுதியில் (நிலமட்டத்தில்) அழுகல் ஆரம்பித்து தாவரம் இறக்கும்.

கட்டுப்பாடு:- பக்கோனில் 1 கி. கி 150 - 200 லீ. நீரில் ஏக்கரொன்றுக்கு.

(இ) இலைப்புள்ளி நோய்

இலைப் பரப்பில் கபிலப் புள்ளிகள் காணப்படும். இப் புள்ளிகளைச் சுற்றி மஞ்சள் நிற ஒளி கசிய விடக்கூடிய பகுதி காணப்படும். நோய் பரவத்தொடங்குமுன் 1கி. கி. டக்கோனிலை 150 - 200 லீற்றர் நீரில் கலந்து ஏக்கரொன்றுக்கு விசிறவும்.

#### அறுவடையும் சேமிப்பும்

நன்கு முதிர்ச்சியடைந்த காய்களை 2 - 3 தடவை பறிக்கலாம். விதைகளை உணவுக்காகச் சேமித்து வைக்கும் போது சிறிதளவு நல்லெண்ணெய் அல்லது நிலக்கடலை எண்ணெய் விட்டு, விதைகளில் நன்கு படும் வண்ணம் கலக்கப்படவேண்டும். இது ஒரு குறிப்பிட்ட அளவு காலத்திற்கு விதைகளைப் பூச்சிகளிலிருந்து பாதுகாக்கும்.

விதைகளுடன் சாம்பல் அல்லது சிற்றகக் குடும்ப இலைகளைக் கலந்து வைப்பதும் பூச்சிகளின் தாக்கத்தினின்றும் பாதுகாக்கும். அதிக காலத்திற்கு சேமித்து வைப்பதெனின் அதற்கேற்ற வாறு உவர்க்கப்படவேண்டும். குளிர் சாதனங்களில் சேமிக்கப்பட்ட விதைகளும் பூச்சிகளினால் சேதமடையாது.

#### விளைவு

மானாவாரியில் ஏக்கருக்கு: 300 - 400 கிலோ.

நீர்ப்பாசனத்தில் ஏக்கருக்கு:- 570 கிலோ.

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

#### கருணை வள்ளல் வடிவேலன்!

ராகம்:- சண்முகப்பிரியா    தாளம்:- ஆதி

பல்லவி

நல்லையிலே நடந்தால்
தொல்லையெலாம் தொலையும்!
நல்லையினைத் தினம் நாடுவாய் — மனமே
[நல்லை......]

அனுபல்லவி

எல்லையில்லாக் கருணை வள்ளல்வடி வேலன்!
வள்ளி குஞ்சரியோடு உள்ளம்மகிழ்ந் துறையும்
[நல்லை......]

சரணம்

பஞ்சனுநட மாடும் கொத்துமலர்ச் சோலை - உயர்
பஞ்சுதொடும் கோயில் விஞ்சுமெழிற் கோலம் - பதம்
தஞ்சமென்றே கூடும் அன்பர்களின் ஓலம் - என்றும்
அஞ்சலென்றே கூறும் கோயில்மணி ஓசை - வளர்
[நல்லை......]

— ச. முருகையா.

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி 6ஆம் திருவிழா]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

01 - 8 - 1990 புதன்கிழமை


# யாழ்ப்பாணத்திற்கு இதுவரை வந்த உணவுப்பொருள் 516 தொன்தான்!

## ஒரு நாளைக்கு மட்டும் 430 தொன் தேவை!!

யாழ்ப்பாணம், ஆக.1

இதுவரை இரண்டு வாகன அணிகள் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொருள்கள் 516 தொன் மட்டுமே என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இரண்டு வாகன அணிகள் மூலமும் 34 தொன் அரிசியும், 67 தொன் மாவும், 56 தொன் சீனியும் கொண்டுவரப்பட்டன.

கப்பல் மூலமாக 143தொன் மாவும், 80 தொன் சீனியும் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாணமாவட்ட சனத்தொகைக்கு ஒரு மாதத்துக்கு 5000 தொன் அரிசியும்,3000 தொன்மாவும், 2000 தொன் சீனியும் தேவையாக உள்ளது.

அத்துடன் இங்கு அகதியாக வெளி மாவட்டங்களில் இருந்து வந்தவர்களுக்கு மேலும் 3000 தொன் அரிசி, மா, சீனி தேவையாக உள்ளன.

சராசரியாக ஒரு நாளைக்கு 430 தொன் அரிசி, மா, சீனி தேவையாக உள்ளன.

அனுப்பப்பட்ட பொருள்கள் ஒருநாளைக்குத்தான் போதுமானவை என்பதை அரச அதிகாரிகள் உயர்மட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதுவும் ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்குப்பின் தற்போதுதான் இந்தத்தொகையும் அனுப்பப்பட்டுள்ளது.

அதே நேரம் அரசசார்பற்ற நிறுவனங்கள் உணவுப் பொருள்களைக் கொண்டுவர முயன்றாலும் போக்குவரத்து தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில்-

யாழ் மாவட்டத்துக்கு வாகன அணி மூலமாகவும் கப்பல் மூலமாகவும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படுவதாக அரசு பிரசாரம் செய்து வருகிறது என்பது தெரிந்ததே. (இ-3)

## கப்பலில் வந்த பொருள்களில் நெருப்புப்பெட்டி, மெழுகுதிரி

யாழ்ப்பாணம்,ஆக. 1

யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ள கப்பலில் நெருப்புப்பெட்டி, மெழுகுதிரிஆகியவையும் வந்துள்ளன.

திங்கட்கிழமை வந்து சேர்ந்த கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றுக் காலையில் இருந்து சுறுசுறுப்பாக நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வத்தைகள் மூலம் கரைக்கு கொண்டுவரப்பட்டபொருள்கள் உடனுக்குடன் லொறிகளில் ஏற்றப்பட்டு அந்த அந்த ப.நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்றன. (இ-3)

## திங்கள் புறப்பட்ட கப்பலில் 185 தொன் பொருள்களே!

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ் மாவட்டத்துக்கு கொழும்பில் இருந்து திங்கட்கிழமை புறப்பப்பட்ட கப்பலில் 185 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே வருகின்றன.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திங்கட்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்ட கப்பலில் 3 ஆயிரம் தொன் அரிசி, மா, சீனி வருவதாக முன்பு தகவல் அனுப்பப்பட்டது.

நேற்றுக்காலை அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசயையாவுடன்தொடர்பு கொண்டபோது 185 மெற்றிக் தொன் மட்டுமே வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் இந்தக் கப்பல் இன்று பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## கப்பலில் தபால் பொதிகளும்

யாழ்ப்பாணம், ஆக. 1

கொழும்பில் இருந்து இன்று மாலை வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் கப்பலில் தபால்பொதிகளும் வருகின்றன என்று கூறப்பட்டது.

இந்தப்பொதிகளில் வெளிநாட்டுக் கடிதங்களும் வரக்கூடும் என நம்பப்படுகிறது.

இங்கிருந்து வெளிநாட்டு, உள்நாட்டு கடிதங்கள் கொண்ட பொதிகள் இன்று திருகோணமலை நோக்கிச் செல்லும் கப்பலில் அனுப்பப்படவிருக்கின்றன. அங்கிருந்து அவை கொழும்புக்கு அனுப்பப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## மருத்துவர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆகஸ், 1

யாழ் போதனா ஆஸ்பத்திரி மருத்துவர்களின் கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் 11 மணிக்கு மானிப்பயில் உள்ள யாழ் போதனா ஆஸ்பத்திரி பிரிவில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய அரசியற் பிரமுகர்கள் சிலர் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப் பட்டது. (உ)

## அகதிகளின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஆக. 1

தெல்லிப்பழை சண்டிலிப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அகதி முகாம்களில் உள்ளவர்கள் நிவாரண உதவி தேவைப்பட்டால், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உள்ள நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## லோர்ட்ஸ் டெஸ்டில் இந்திய அணி தோல்வி!

லண்டன், ஆகஸ்ட் 1

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் லண்டன் லோர்ட்ஸ்மைதானத்தில் நேற்று முடிவுற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 247 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது

நேற்று இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 224 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்ததை அடுத்து அந்த அணி தோல்வியுற்றது

ஓட்ட விவரம் வருமாறு:-

இங்கிலாந்து அணி:- முதலாவது இன்னிங்ஸ் — 4 விக்கெட் இழப்புக்கு 653 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் — 4 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்கள்.

இந்திய அணி:- முதல் இன்னிங்ஸ் — 454 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் — 224 ஓட்டங்கள். (உ)

## ப. நோ. கூ. ச. முகாமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆகஸ் 1

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரிச் செயலகக் கூட்டுறவுப் பகுதியால் கேட்கப்பட்டுள்ளது. (அ-5)

## வயலில் வேலை செய்தோர் தாக்கப்பட்டதில் 14 பேர் பலி!

கொழும்பு, ஆக.1

அக்கரைப்பற்றில் வயலில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள்மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் 14பேர் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

கொழும்பில் இராணுவஅதிகாரிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் அனேகமாக முஸ்லிம்களாக இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## தொல்பொருள் ஊழியர் சம்பளம்

யாழ். தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கான ஜூன், ஜூலை மாதச் சம்பளம் வழங்கப்பட்டது. (இ-111)

# தேவிலாலை பதவி நீக்க பிரதமர் வி.பி.சிங் தயார்?

புதுடில்லி, ஆகஸ்ட் 1

போலிக் கடிதம் ஒன்று தொடர்பாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க துணைப் பிரதமர் தேவிலால் மன்னிப்புக்கோராவிட்டால், அவரைப் பதவி நீக்கம் செய்ய பிரதமர் வி. பி சிங் தயாராகி விட்டார்.

-இப்படிப் பிரதமர் வி. பி. சிங்குடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தற்போது மத்திய அமைச்சர்களாக இருக்கும் மூவர் பற்றி 1987இல் திரு வி. பி. சிங் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததாகக் கூறப்படும் கடிதத்தின் பிரதி ஒன்றை துணைப் பிரதமர் தேவிலால் பிரதமர் வி. பி. சிங்குக்கு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்தே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அக்கடிதம் போலியானது என்று தெரிந்திருந்தும் தனக்கு ஏன் அக்கடிதத்தின் பிரதியை அனுப்பி வைத்தீர் என்று துணைப் பிரதமர் தேவிலாலிடம் பிரதமர் வி. பி. சிங் விளக்கம் கேட்டிருக்கிறார்.

அப்போலிக் கடிதத்தில் அருண்நேரு உட்பட மூன்று அமைச்சர்கள் மீது திரு. வி. பி. சிங் ஊழல் குற்றங்களைச் சுமத்தியிருந்தாராம்.

துணைப் பிரதமர் தேவிலால், இது தொடர்பாக மன்னிப்புக் கோரினாலும் அருண்நேரு போன்றோர் இது விஷயத்தை அத்துடன் விட்டுவிடும் நிலை இல்லை என்றும்-

தேவிலால் மீது நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் பிரதமர் சிங் துணிச்சலாக செயல்படக் கூடிய நிலை புதுடில்லியில் உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் ஹரியானா முதலமைச்சராக தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா மீண்டும் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து முதலில் பதவி விலகிய மூன்று அமைச்சர்களான அருண்நேரு, ஆரிப் முகம்மது கான், சத்யபால் மாலிக் ஆகியோரின் பெயர்களே அப்போலிக் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதே வேளை- இவ் விவகாரம் குறித்து ஜனதாதள் முதலமைச்சர்களுடன் பிரதமர் வி. பி. சிங் நேற்று மந்திராலோசனை நடத்தினார்.

இவ் விவகாரத்தில் பிரதமர் சிங் தனது விருப்பம் போல் செயல்படலாம் என்று வி. பி. சிங் அரசுக்கு ஆதரவு அளித்து வரும் ஜனதாகட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அறிவித்துவிட்டன. (உ-எ)

## யாழ். கோட்டைக்குள் ராணுவம் - பொலீஸ் லடாய்?

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ். கோட்டைக்குள் இருக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும், தமிழ் பொலீஸாருக்கும் இடையில் கடந்த திங்களன்று கருத்துவேறுபாடு ஏற்பட்டதாகவும்-

இதனை அடுத்து இருசாராரும் முகாமுக்குள் மோதிக்கொண்டதாகவும் ஊர்ஜிதப் படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

இந்தச்செய்தி தொடர்பாக மேலதிக விவரங்கள் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை [உ]

### முருங்கனில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரணம் அடைந்தார்.

நேற்று சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து 43 வாகனங்களில் வெளியேறிய இராணுவத்தினர் முருங்கனுக்கு வந்ததாகவும் —

அங்கிருந்து 10 ஆம் கட்டைக்கு முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொருங்கின. கதவுகள் உடைந்தன.

அருகில் உள்ள பேராலய பங்குத் தந்தைகள் தங்கும் பணிமனையும் சேதமடைந்தது. அங்கு அகதிகளாக இருந்தவர்களும், பங்குத் தந்தைகளும் தெய்வாதீனமாக தப்பினார்கள்.

பேராலயம் புனரமைக்கப்பட்ட எட்டாவது நினைவு (ஜூபிலி)நாள் அன்றைய தினம் (திங்கட்கிழமை)காலையில்தான் கொண்டாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-5)

### குண்டு வெடித்துத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மண்டலமாக்கியது.

இக் குண்டினால் பேராலய குருமனையின் பல பகுதிகளும் சேதமடைந்தன. கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் நொருங்கிச் சிதறின.

பொம்மர் போன பின்பு ஆலயத் தொண்டர்களின் உதவியுடன் ஆலயப் பகுதியை சுத்திகரித்து, பெறுமதியான பொருள்களை ஓர் இடத்தில் வைத்தோம்.

இக்கட்டான இந்த நிலையிலும் நேற்று இரு புதிய குருமாருக்கு குருப்பட்டம் வழங்கியமையையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்- என்றார்

இந்தத் தாக்குதல் சம்பவம் மூலம் தமிழரின் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படலாம் என்று அடிகளார் நம்பிக்கை தெரிவித்தார். (ஒ-3-5)

### கல்வியம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

காயமடைந்தார். அவர் தமது வீட்டு வளவில் நின்றபோது காலின் குதிப்பகுதி ஊடாக சன்னம் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முத்திரைச் சந்திப் பகுதியில் மற்றும் இருவர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

வேட்டுக்களைத் தீர்த்தபடி வந்த அந்த ஹெலியை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அது திரும்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### முதல்வர்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

போது இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து பிரதமர் வி. பி. சிங்குடன் தாம் பேசப்போவதாக திரு. கருணாநிதி கடந்தவாரம் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

### உணவுப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொன்று விட்டு, லொறியில் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்து, லொறிக்கு தீயிட்டுக் கொழுத்தினர் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து வவுனியா, மாங்குளம் பகுதிகளில் வசித்த முஸ்லிம் மக்கள் அச்சம் காரணமாக புத்தளம் பகுதிக்கு இடம்பெயர்ந்ததாக கூறப்பட்டது. (உ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை பானுமதி

நெல்லியடி கன்பொல்லை வீதியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பானுமதி 27-07-90 அன்றுகாலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், கனகசபை, சின்னத்தம்பி, தங்கம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகேஸ்வரி, வள்ளியம்மை, பரமேஸ்வரி,செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குலதிலகபிள்ளை, சண்முகலிங்கம், நடராஜா (Saudi), சிவயோகநாதன் (சிவயோகம் S. Y. Travels) ஆகியோரின் அன்பு மாமியாரும் திலகேஸ்வரி, சியாமளன், சாருகேசி, கிருபாஞ்சலி, சாரங்கன், சாகீர்த்தியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28 - 07 - 1990 சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு சோனப்பு குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இவ்வறிவித்தலை உரிய நேரத்தில் அறிவிக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.

தகவல்:
R. சிவயோகநாதன் (சிவயோகம்),
(S. Y. TRAVELS)

கன்பொல்லை வீதி,
நெல்லியடி. [13965]

### முத்தையா இரத்தினகோபால் [சிவகுரு]

வேலணையை பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினகோபால் [முன்னாள் சந்திரா சங்கக் கடை முகாமையாளர்] 30-07-1990 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், ரோகிணியின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் மாமனாரும், சாந்தினி, அமுதா, தாஸ்சிறி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியை துண்டி மயானத்தில் 31-07-1990 இல் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. ரோகிணி

25, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். [13969]

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி ஈஸ்வரபாதம்

(ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

சரசாலையைச் சேர்ந்தவரும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டருமாகிய இளையதம்பி ஈஸ்வரபாதம் நேற்றுக் காலை காலமானார்.

இவர் வசந்தரூபாவின் அன்புக் கணவரும், ஈஸ்வரபவானி, ரூபரஞ்சனி, சரவணபவன் (நிர்வாக இயக்குனர் உதயன்/சஞ்சீவி நிறுவனம் - ஷப்றா, யாழ்ப்பாணம்), ஸ்ரீரஞ்சனி, முகுந்தன் (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (ஹில்ஸ் கலர் போட்டோ - கொழும்பு), கீதாசேதீஸ்வரி (சவூதி), நவநீதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சோமசுந்தரம், பாலசுப்பிரமணியம் (நிர்வாக இயக்குனர்,ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்), யசோதை, சக்திதாசன் (ஓமான்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (ஹில்ஸ் கலர் போட்டோ-கொழும்பு), ஸ்ரீசாந்தா (சவூதி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நவரட்ணராஜா இராசமணி, நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நல்லம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மணிமேகலை (அவுஸ்திரேலியா), திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ரங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா), மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்; ரமணன், உமையாள், சிந்தியா, அபிராமி, சித்ருபி, பிரகதீபன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது கொக்குவில் -நந்தாவில் சம்பியன் லேன் இல்லத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ஈ. சரவணபவன்.

யாழ்ப்பாணம்.

### கந்தையா - கனகசிங்கம்

மல்லாகத்தைச் சேர்ந்த கந்தையா கனகசிங்கம் 31-07-90 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற A.V. கந்தையா அவர்களதும் பொன்மணி அவர்களதும் ஏகபுத்திரனும் கமலாம்பிகை, லீலாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சட்டத்தரணி W. கார்த்திகேசு, பொறியியலாளர் N. பாலசுப்பிரமணியம் [லண்டன்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுருநாதன், பகீரதி, லாகினி, அமிர்தகலா, அமிர்தவேணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவர்.

ஈமக்கிரியைகள் மல்லாகத்தில் இன்று 1-8-90 காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
தியாகராசா தில்லைநாதன்

ரெம்பிள்வியூ,
மல்லாகம். [13968]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org